பக்கங்கள்: 06

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 17 ஞாயிற்றுக்கிழமை 04.10.2020 கதிர் 198

## களனி பல்கலை ஒரு வாரம் பூட்டு

கொழும்பு, ஒக் 04

களனி பல்கலைக்கழகக் கழகம் நாளை திங்கட்கிழமை தொடக்கம் ஒரு வாரம் மூடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கம்பஹா விக்கிரமாரச்சி ஆயுர்வேதக் கல்லூரி, நாவல உயர் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவனவும் ஒரு வாரத்துக்கு மூடப் 2

# இலங்கையில் மீண்டும் அச்சம் கம்பஹாவில் சமூகத் தொற்று

## பெண்ணொருவருக்குக் கொரோனா; 55 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு, ஒக் 04

இலங்கையில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் சமூகத்தில் இருந்து கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கம்பஹா, திவுலப்பிட்டிய பகுதியிலுள்ள பெண்ணொருவருக்கே கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

மினுவாங்கொடைப் பகுதியிலுள்ள ஆடை தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்த 39 வயதுடைய பெண்ணொருவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் பரவியுள்ளது. அவர் அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். 2

## ஊரடங்கு உள்ள பிரதேசங்களில்
# முப்படையினரும் முகாங்களுக்குள்

கொழும்பு, ஒக் 04

கம்பஹா மாவட்டம் மினுவாங்கொட, திவுலபிடிய பிரதேசங்களில் உள்ள முப்படை முகாங்களில் கடமையாற்றும் படையினர் மறு அறிவித்தல் வரை கடமைக்குச் சமுகமளிக்கவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தப் பகுதிகளில் உள்ள முகாங்களுக்குள் உள்ள படையினரையும் வெளியேற வேண்டாம் என்றும் பாதுகாப்பு படைகளின் பிரதானி அறிவித்துள்ளார். 2

# பீதியடையவேண்டாம்!



## நாமல் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஒக் 04

மினுவாங்கொடை மற்றும் திவுலப்பிட்டிய பகுதியில் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் ஒவ்வொரு இலங்கையர்களும் கொவிட் – 19 தொற்று நோயின் தீவிரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 2

## நீர்கொழும்புக் கடலில் மூழ்கி 3 இளைஞர்கள் பரிதாபப் பலி!



கொழும்பு, ஒக் 04

நீர்கொழும்பு, கொச்சிக்கடை கடலில் நேற்று குளிக்கச் சென்று காணாமல்போன 3 இளைஞர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று இளைஞர்களும் மலையகத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களில் இருவர் தலவாக்லை, ஸ்டேலின் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முத்துகுமார் சிந்துஜன் (வயது 24), மனோகரன் சசிகுமார் (வயது 22) ஆகிய இருவரும் மேற்படி தோட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

மற்றைய இளைஞர் பதுளை, நமுனுகல 2

## கொரோனாத் தொற்றையடுத்து கம்பஹாவில் ஊரடங்குச் சட்டம்

கம்பஹா மாவட்டத்தில் திவுலப்பிட்டிய, மினுவங்கொடை பொலிஸ் பிரிவுகளில் இன்று முற்பகல் தொடக்கம் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களமும் பொலிஸ் ஊடகப் பிரிவும் அறிவித்துள்ளன.

மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளுக்குச் செல்வதற்கும், அங்கிருந்து வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. திவுலப்பிட்டிய பகுதியில் 39 வயதுடைய பெண்ணொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலையிலேயே ஊரடங்குச் சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 'கொரோனா' பெண் பணிபுரிந்த ஆடைத் தொழிற்சாலைக்கு 'சீல்'!

கொழும்பு, ஒக் 04

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண் பணிபுரிந்த ஆடை தொழிற்சாலைக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளதாக அந்தப் பிரதேச சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யகாதுவ பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு முன்னணி ஆடைத் தொழிற்சாலையிலேயே அந்தப் பெண் பணிபுரிந்து வந்துள்ளமையினால், அந்த ஆடை தொழிற்சாலைக்கு தற்போது சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அதிகாரிகள் மேலும் கூறியுள்ளதாவது:–

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண்ணுடன் தொடர்பைப் பேணியவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். 2

## அபாய வலயமாகின்றது புங்குடுதீவு?

### கம்பஹா ஆடைத்தொழிற்சாலையிலிருந்து பெண்கள் இருவர் யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம், ஒக் 04

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடையில் உள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிவரும் யாழ்ப்பாணம், புங்குடுதீவைச் சேர்ந்த பெண்கள் இருவர் ஊர் திரும்பிய நிலையில் புங்குடுதீவில் சுகாதார நடவடிக்கைகளும் விசாரணைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

புங்குடுதீவு 12ஆம் வட்டாரம் பகுதியில் வசிக்கும் பெண்கள் இருவர் மினுவாங்கொடையில் இருந்து கடந்த வாரம் ஒருவரும் நேற்றுமுன்தினம் ஒருவரும் புங்குடுதீவில் உள்ள தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அவர்கள் இருவரும் பஸ்களில் பயணம் செய்திருக்கின்றமையும் தெரியவந்துள்ளது. 2

## 400 பேருக்கு பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக் 04

கம்பஹா, திவுலப்பிட்டிய பகுதியில் கொரோனா வைரஸ் நோயாளியாக இனம் காணப்பட்ட பெண்ணுடன் தொடர்புடைய சுமார் 400 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 400 பேருக்கும் பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

திவுலப்பிடிய பகுதியைச் 2

# '20' இற்கு சு.க. ஆதரவு!

### எதிரணி உறுப்பினர்கள் ஐவரை வளைத்துப்போட பஸில் களத்தில்

கொழும்பு, ஒக் 04

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கு உறுதியளித்துள்ளது.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அண்மையில் குழு ஒன்றை அமைத்திருந்தது.

அந்தக் குழுவானது 20 இற்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைத்துள்ளது என்றும், அதனடிப்படையில் கட்சியின் தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ஆகியனவும் 20ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் முடிவை ஆளுங்கட்சிக்குத் தெரியப்படுத்தியுள்ளன. 2

## பாடசாலைகளுக்கு நாளை முதல் இரண்டாம் தவணை விடுமுறை!

கொழும்பு, ஒக் 04

நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளுக்கும் நாளை முதல் இரண்டாம் தவணை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு விசேட அறிக்கை ஒன்றின் ஊடாக இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

அத்துடன், தனியார் வகுப்புகளை நடத்துவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. 2

## கம்பஹாவை விட்டு வெளியேறத் தடை!

கொழும்பு, ஒக் 04

கம்பஹாவில் தமது நகர எல்லையை விட்டு வேறு நகருக்குப் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கம்பஹா, திவுலப்பிட்டிய, மினுவாங்கொட, வெம்முல்ல, மொரகஸ் முல்ல, வெவ 2

## தமிழர் நேர் வழியில் நடந்தால் தீர்வும் தானாக வந்து சேருமாம்

### ராஜபக்ஷ அரசு இப்படி அறிவுரை

கொழும்பு, ஒக் 04

இலங்கை மூவினத்தவர்களுக்கும் சொந்தமான நாடு. இங்கு தமிழர்கள் அரசை மதித்து – அரசமைப்பை மதித்து – நேர்வழியில் நடந்தால் அவர்களுக்கான அரசியல் தீர்வும் தானாகவே கிடைக்கும்.

– இவ்வாறு சபை முதல்வரும் வெளிவிவகார அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் அரசமைப்பை மதித்து – அரசை மதித்து – தமிழர்கள் நேர் வழியில் நடந்திருந்தால் ஆயுதப் போராட்டம் ஒன்று நடந்திருக்க வாய்ப்பே இருந்திருக்காது. பல இழப்புகளையும் தமிழர்கள் சந்திக்க வேண்டி வந்திருக்கமாட்டாது. 2

## இலங்கையில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காய்ச்சல் காரணமாக கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த இவர், சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்புகையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலமே வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து வைத்தியசாலை அதிகாரிகள் 15 பேர், அவர் தொழில் புரிந்த இடத்திலுள்ள 40 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவருக்கு எவ்வாறு கொரோனா வைரஸ் பரவியது என்பதைக் கண்டறிவதற்கான விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

## களனி பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றன.

அதனால் விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## முப்படையினரும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அந்தப் பிரதேசங்களிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணிக்குச் செல்பவர்களையும் கடமைக்கு சமுகமளிக்கத் தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மினுவாங்கொட, திவுலபிடிய பிரதேசங்களில் மறு அறிவித்தல் வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் இந்த நடைமுறை மறு அறிவித்தல்வரை இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 400 பேருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,395 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## 'கொரோனா' பெண்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், அந்தப் பெண்ணுடன் பஸ்ஸில் பயணித்த சுமார் 40பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தப் பெண்ணின், குடும்ப உறுப்பினர்களான கணவர், நான்கு குழந்தைகள் மற்றும் அவரது தந்தை ஆகியோர் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன் அந்தக் குழந்தைகளில் ஒருவருக்கு, தடிமன் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பெண் பணி புரிந்த ஆடை தொழிற்சாலைக் கட்டடம், தற்போது சீல் வைக்கப்பட்டுள்ளது – என்றனர்.

## அபாய வலயமாகின்றது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையே ஊர் திரும்பிய பெண்களின் வீட்டுச் சூழலில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் பிரசன்னமாகியுள்ளமையுடன் தீவிர விசாரணை இடம்பெற்று வரும் நிலையில் அந்தப் பகுதி அபாய பகுதியாக அறிவிக்கப்படக்கூடும் என்றும், மக்களை சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறும் சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## தமிழர் நேர் வழியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைவீரர்களின் தியாகத்தால் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். தமிழர்கள் நிம்மதியாக வாழும் நிலையை ஏற்படுத்தினோம். ஆனால், அவர்கள் திரும்பவும் பழைய நிலைக்கே செல்ல முற்படுகின்றார்கள்.

ஆயுதப் போராட்டக் காலத்தில் உயிரிழந்த பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளை நினைவுகூர அனுமதி கேட்டு வடக்கு, கிழக்கில் ஹர்த்தாலைத் தமிழர்கள் அனுஷ்டித்துள்ளார்கள். போதாக்குறைக்கு இந்து ஆலயம் முன் உண்ணாவிரதமும் இருந்துள்ளார்கள்.

அரசையும் சிங்கள மக்களையும் சீற்றமடையைச் செய்யும் வகையில் தமது நடவடிக்கைகளைத் தமிழர்கள் முன்னெடுக்கின்றார்கள். நாட்டைப் பிளவுபடுத்தும் அரசியல் தீர்வு வேண்டும் என்று ஒற்றைக்காலில் அவர்கள் நிற்கின்றார்கள்.

தமிழர்கள் அரசை மதித்து – அரசமைப்பை மதித்து நேர் வழியில் நடந்தால் அவர்களுக்கான அரசியல் தீர்வும் தானாகவே கிடைக்கும். ஆனால், அந்தத் தீர்வு ஒற்றையாட்சித் தீர்வாகவே இருக்கும். அதையும் அவர்கள் உதறி எழுந்தால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. தமிழர்கள் செவ்வாய்க் கிரகம் சென்றுதான் தமக்கான தீர்வைக் கேட்க வேண்டி வரும் – என்றார்.

## கம்பஹாவை விட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெதர, ஹப்புவ லான, ஹேன்பிடிகெதர மற்றும் கன்ஹின்முல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்துவர்களுக்கே இவ்வாறு உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## பீதியடையவேண்டாம்!..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் தனது டுவிட்டர் பதிவில் மேலும் கூறியுள்ள அவர்,

பாதுகாப்பு நடவடிக்கைகளை அவசியம் கடைப்பிடிக்கவேண்டும். தயவுசெய்து பீதி அடைய வேண்டாம். சுகாதார வழிகாட்டுதல்களை பொது மக்கள் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள் ளார்.

## '20' இற்கு சு.க. ஆதரவு!..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனிடையே எதிரணி உறுப்பினர்கள் ஐவர் அரசுடன் இணைவது உறுதி என சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்களை வளைத்துப் போடும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ களமிறங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## முன்பள்ளிகளுக்கும் நாளை முதல் விடுமுறை

நாடளாவிய ரீதியில் உள்ள சகல முன்பள்ளிகளுக்கும் நாளை முதல் விடுமுறை வழங்குவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி, ஆரம்பக் கல்வி இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் உள்ள அரச பாடசாலைகளுக்கும் அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச பாடசாலைகளில் இரண்டாம் தவணைக்கான விடுமுறை எதிர்வரும் 9 ஆம் திகதி வழங்கப்படவிருந்தது.

எனினும், திவுலப்பிட்டிய பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர் ஒருவர் அடையாளம்காணப்பட்டமையையடுத்தே, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் முன்கூட்டியே விடுமுறை வழங்கப்படுகின்றது.

## நீர்கொழும்புக் கடலில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர்கள் கொழும்பிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் நேற்று மாலை குளிப்பதற்காகத் தமது நண்பர்களுடன் நீர்கொழும்பு நீர்கொழும்பு கடலுக்குச் சென்றுள்ளனர். இந்தநிலையில் திடீரென அலைக்குள் சிக்குண்டு கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமல்போயுள்ளனர்.

காணாமல்போன மூவரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார், அவர்களின் சடலங்களைத் தேடும் பணிகளைக் கடற்படையினரும் சுழியோடிகளும் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்புப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# பெருக்கெடுக்கும் பேரினவாதம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் இன்று காலை இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக நடத்திய ஆய்வரங்கில் பேசப்பட்ட விடயங்களில் முக்கியமாக இரண்டு கவனிக்கத்தக்கவை.

ஒன்று – நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்த தகவல்.

மற்றையது – சட்ட உரையை நிகழ்த்திய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த ஊகம்.

13 ஆவது திருத்தத்தையும் அதன் கீழாக மாகாண சபை முறைமையையும் இல்லாதொழிப்பது குறித்து தெற்கில் இப்போது அதிகம் பேசப்படுகின்றது. மாகாண சபைக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்களை விலக்குவதாயின், நாட்டில் உள்ள அனைத்து மாகாண சபைகளிடமும் அனுமதி பெறப்பட வேண்டும் என்று அரசமைப்பின் 154 ஆவதி பிரிவு கூறுகின்றது. அப்படி மாகாண சபையின் சில அதிகாரங்களை விலக்குவதற்கே அனைத்துச் சபையின் சம்மதமும் பெற வேண்டும் என்று கட்டுப்பாடு இருக்கையில், மாகாண சபை முறைமையே நீக்குவதாயின் அதற்கும் மாகாண சபைகளின் அனுமதி பெறப்பட வேண்டுமெல்லவா? பெறாமல் அப்படிச் செய்யவே முடியாது என்று சுட்டிக் காட்டினார் சி.வீ.கே.சிவஞானம்.

ஆகவே, மாகாண சபை முறைமையை நீக்குவதாயின் முதலில் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி முழு மாகாண சபைகளையும் இயங்க வைக்க வேண்டும். அதன் பின்னர்தான் மாகாணசபை முறைமையை நீக்குவது குறித்து ஆராயலாம் என்று அவர் சுட்டிக்காட்டிய விவகாரம் சட்ட ரீதியில் முற்றிலும் சரியானதுதான்.

ஆனால், மாகாண சபை முறைமையை நீக்குவது என்பது ஓர் அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டு வரப்பட்டால் மட்டுமே இந்த நிலைமை பொருந்தும்.

மாறாக, புதிய அரசமைப்பு ஒன்று என்ற ஏற்பாட்டுடன் அரசமைப்பை முழுமையாக மாற்றும் முயற்சி எடுக்கப்பட்டால், அப்படித் திருத்தப்படும் புதிய அரசமைப்பு உயர் நீதிமன்றுக்குப் போக மாட்டாது. நேரடியாக மக்கள் தீர்ப்புக்காக அது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். அத்தகைய புதிய அரசமைப்பில் 13 ஆவது திருத்த விடயங்களோ, மாகாண சபை முறைமையோ இல்லாவிட்டால் அதைத் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாது என்பதுதான் நிலைமையாகும்.

அடுத்த விவகாரம் – இருபதாவது திருத்தத்தை இந்த அரசு வெற்றிகரமாக நிறைவேற்றுமாயின் ஜனாதிபதிக்கு கட்டுமட்டில்லா அதிகாரம் வந்து விடும். குடியரசு நாட்டில் முடியாட்சி நிலைமை ஏற்பட்டு விடும். அதற்குப் பிறகு புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்காது. ஆகவே புதிய அரசமைப்பு உருவாக்கமோ, தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கிய விடயங்களின் நடைமுடுறைப்படுத்தலோ அதன்பின் சாத்தியமற்றது என்ற சாரப்பட கருத்துரைத்தார் சுமந்திரன்.

மறுக்கப்பட முடியாத – யதார்த்தமான – கணிப்பீடுதான் இது. ஆனாலும், இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டும்.

இன்று ஜனாதிபதிப் பதவியில் இருப்பவர் இராணுவச் சர்வாதிகாரச் சிந்தனை மட்டும் கொண்டவரல்லர். அதையும் தாண்டி, பௌத்த, சிங்களப் பேரினவாதச் சிந்தனையில் மூழ்கித் திளைத்தவர். அதனை ஒரு வெறியாகக் கொண்டவர் என்றும் விமர்சிக்கப்படுவர்.

இருபதாவது திருத்தம் மூலம் எதேச்சாதிகாரத்துக்கான – சர்வாதிகாரத்துக்கான – முடியாட்சிக்கான – அதிகாரங்கள் தமது கைக்கு வந்தவுடன் அதனுடன் அடங்கப் போகின்றவர் அல்லர் அவர், அல்லது அந்தக் கட்டுமட்டில்லா அதிகாரங்கள் மூலம் பௌத்த, சிங்கள மேலாதிக்கத்தை திணித்து, மேலாண்மையைப் பிரயோகித்து, சிறுபான்மை இனங்களையும் அவர்கள் தம் மொழியையும், மதங்களையும் அடக்குவதுடன் ஓயப் போகின்றவரல்லர் அவர். அவற்றைத் தாண்டி, அரசமைப்பு ரீதியாகவும், சட்டங்கள் வாயிலாகவும் சிறுபான்மை இனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கங்களை – குறைந்தபட்சம் நடைமுறைப்படுத்தப்படாமல் அரசமைப்பில் இடம்பெற்றிருக்கும் மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் போன்றவற்றை – இல்லாமல் செய்வதில் நிச்சயம் தீவிரமாக இருப்பார். அதைச் செய்வதற்காகவேனும் புதிய அரசமைப்பு என்ற நாடகத்தை அவர் அரங்கேற்றுவார்.

அந்த நாடகத்தில், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறுவதற்காக மாகாணசபை முறைமை நீக்கம் என்ற அத்தியாயத்தை நிச்சயம் சேர்த்துக் கொள்வார். அதன் மூலம் வழமை போல பௌத்த, சிங்கள வாக்குகளுடன் அதை நிறைவேற்றவும் செய்வார்.

இப்போது பேரினவாதம் தெற்கில் விஸ்வரூபம் எடுத்து, இராட்சதக் கோலம் கொண்டு, பெருவெள்ளமாகப் பிரவாகம் எடுத்து கொந்தளித்து ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், சிறுபான்மை இனங்களையும் மதங்களையும் துவம்சம் செய்து, பந்தாடி, ஒரு கை பார்த்த பின்னர்தான் அது ஓயும் போல் தென்படுகின்றது.

# புங்குடுவுப் பூசகர் படுகொலை சந்தேகநபர்கள் வாக்குமூலம்!

## சீ.சீ.ரி.வி. பதிவும் மீட்பு





புங்குடுதீவு, ஊரதீவு சிவன் கோயில் பூசகரைக் கொலைசெய்த குற்றச்சாட்டில் மூவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இதன்போது, தாங்கள் மூவரும் மது போதையில் இருந்தமையால் பூசகரை இரும்புக் கம்பியால் தாக்கிவிட்டோம் எனவும் அதனால், அவர் மயங்கிச் சரிந்துவிட்டார் என்றும் சந்தேகநபர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் கண்காணிப்புக் கமெராவில் பதிவாகியிருக்கும் என்பதால் அதன் சேமிப்பகத்தை எடுத்துச் சென்று மறைத்தனர் எனவும் அவர்கள் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

புங்குடுதீவு ஊரதீவு சிவன் ஆலய பூசகரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அவரது உதவியாளர் உட்பட மூவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பெண்ணொருவரை அழைத்துவந்து கலாசார சீரழிவில் ஈடுபட முற்பட்டபோது அதனை அனுமதிக்காது கண்டித்தமையைத் தொடர்ந்தே பூசகரை அவரது உதவியாளரும் ஏனைய இருவரும் சேர்ந்து கொலை செய்துள்ளனர்.

இதேவேளை, பெண் ஒருவரைக் காதலித்தமைக்காக பூசகர் தன்னைத் தாக்கினார் என்றும் இதனையடுத்தே நேற்றிரவு மது அருந்திவிட்டு பூசகரை தாம் தாக்கினார் எனவும் பூசகரின் உதவியாளர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனிடையே, பூசகரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமெராவின் சேமிப்பகம் சந்தேகநபர்களின் தகவலின் அடிப்படையில் பொலிஸாரால் நேற்று மாலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பூசகரின் உடமையிலிருந்த 15 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்திருந்த சந்தேகநபர்கள், யாழ். நகருக்குச் சென்று பொருள்கள் வாங்கி வரும்படி இரு பெண்களிடம் வழங்கியுள்ளனர். இதனால், குறித்த பணத்தை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் விசாரணைகளின் நிறைவில் சந்தேகநபர்கள் ஐவரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

### பின்னணி

கிளிநொச்சியைச் சேர்ந்த இராசையா இராசரூப சர்மா (வயது – 32) என்ற ஊரதீவு பாணாவிடை சிவன் கோயில் பூசகர் கொலைசெய்யப்பட்ட நிலையில் நேற்று சனிக்கிழமை அதிகாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறை நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் ஆகியோர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். பூசகரின் தலையின் பின்பகுதியில் இரும்புக் கம்பியால் தாக்கியமையால் அவர் கொல்லப்பட்டார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பூசகரின் உதவியாளரான கிளிநொச்சி, விசுவமடுவைச் சேர்ந்த விதுஷன் மற்றும் சுழிபுரம் பாணாவெட்டையைச் சேர்ந்த ஆலய உதவியாளர்கள் இருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 20 ஆவது திருத்தத்தினால் எந்தப் பிரச்சினையும் இல்லை

## வக்காலத்து வாங்குகிறார் டக்ளஸ்



20 ஆவது அரசமைப்பு திருத்தம் மக்கள் ஆணைக்கு ஏற்ப மக்களின் அபிவிருத்திகளை நிறைவேற்றக்கூடியதாக அமையும். அதில் எந்தவொரு பிரச்சினையும் இல்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத கிராம வீதிகள் மற்றும் தீவகத்திற்கான நெடுஞ்சாலை வீதி என்பனவற்றை அபிவிருத்தி செய்யும் வகையிலான ஆரம்பப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பெருக்குளம் உள்ளக வீதியும் விபுலானந்த வீதியையும் புனரமைப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. யாழ் பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன், யாழ் மாநகர சபை ஆணையாளர் எஸ்.ஜெயசீலன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# மத்திய கிழக்கு நாடுகளில் 63 இலங்கையர் மரணம்!

கொரோனாவால் இதுவரை 63 இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் நூற்றுக்கு 50 வீதமான மரணங்கள் சவூதி அரேபியாவில் பதிவாகியுள்ளன.

இந்த தகவல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் பிரதி முகாமையாளரும் ஊடக செய்தித் தொடர்பாளருமான மங்கள ரந்தெனிய தெரிவித்தார்.

# சவுரியா ஏவுகணை வெற்றிகர சோதனை!



அணுவாயுதங்களை ஏந்திச் செல்லும் வகையில் தரம் உயர்த்தப்பட்ட சவுரியா (Shaurya Missile) ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.

ஒடிசாவின் பாலசோர் ஏவுதளத்தில் இருந்து நேற்று (சனிக்கிழமை) இந்த சோதனை நடத்தப்பட்டதுடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை ஏவுகணை துல்லியமாக எட்டியுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (Defence Research and Development Organisation (DRDO))ஏவுகணைத் துறையில் முழு தன்னிறைவை எட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அந்தவகையில், 400 கிலோமீற்றருக்கும் அதிகமான தொலைவிலுள்ள இலக்கைத்தாக்கும் வகையில் உருவாக்கப்பட்ட பிரம்மோஸ் சூப்பர் சோனிக் கப்பல் ஏவுகணையையும் இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.

இந்நிலையில், இந்த ஏவுகணையின் முன்னைய தயாரிப்பான 100 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணையே தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணை 800 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய் நாட்டைப் பாதுகாப்பதில் அக்கறையுடன் பா.ஜ.க அரசு!

## மோடி பெருமிதம்



காங்கிரஸ் ஆட்சியில் பாதுகாப்பு விடயங்களில் சமரசம் செய்யப்பட்டது எனவும் தனது பா.ஜ.க. அரசு நாட்டைப் பாதுகாப்பதில் கூடுதல் அக்கறையும் முக்கியத்துவும் அளிக்கிறது என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இமாச்சலப் பிரதேசத்தில் மணாலி – லே இடையே அமைக்கப்பட்டுள்ள உலகிலேயே மிக நீளமான 'அடல்' சுரங்கப் பாதையை பிரமதர் மோடி நேற்று (சனிக்கிழமை) திறந்து வைத்து உரையாற்றியபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

மத்தியில் பத்து ஆண்டுகளில் ஒரு கட்சி ஆண்ட போது 'அடல்' சுரங்கப்பாதை முதல் லடாக்கில் உள்ள தவுலத் ஒல்டி விமானப்படைத் தளம், தேஜாஸ் விமானத் தயாரிப்பு வரை அனைத்தும் தாமதிக்கப்பட்டன, மறக்கப்பட்டன.

இந்தத் திட்டங்கள் தாமதப்படுத்தப்பட்டதற்கும் மறக்கப்பட்டதற்கும் பின்புலத்தில் இருந்த அழுத்தம் என்ன?

என்னுடைய அரசு, எல்லையில் கட்டமைப்பை வலுப்படுத்தத் தேவையான அனைத்து வலிமையான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதுடன் எல்லையில் சாலைகள், பாலங்கள், சுரங்கப் பாதைகளை அமைத்துள்ளது. இதற்கு முன்பு எல்லைப் பகுதியில் அமைக்கப்படுவதற்காகப் போடப்படும் திட்டங்கள் அனைத்தும் காகிதத்திலேயே இருந்தன.

அடல் பிஹாரி வாஜ்பாய் கடந்த 2002ஆம் ஆண்டு இந்தச் சுரங்கப்பாதைக்கு அடிக்கல் நாட்டினார். அடுத்த ஆட்சிக்கு வந்தவர்கள் இந்தத் திட்டத்தையே மறந்துவிட்டார்கள். கடந்த 2013 – 2014 ஆம் ஆண்டில் ஆயிரத்து 300 மீற்றருக்கு மட்டுமே பணிகள் நடந்தன. அப்படியே சென்றிருந்தால் 2040ஆம் ஆண்டில்தான் இந்தத் திட்டம் முடிந்திருக்கும்.

ஆனால், 2014ஆம் ஆண்டில் என்னுடைய தலைமையில் ஆட்சிக்கு வந்தபின்னர் இந்தத் திட்டம் வேகமெடுத்து ஆண்டுக்கு 300 மீற்றர் என்பதிலிருந்து ஆயிரத்து 400 மீற்றர் பணிகள் முடிக்கப்பட்டு 2020ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

26 ஆண்டுகள் நடக்கவேண்டிய பணிகளை என்னுடைய அரசு வெறும் 6 ஆண்டுகளில் முடித்துள்ளது. இதுமட்டுமல்லாது தவுலத் பெக் விமானப் பாதையும் கடந்த 40 ஆண்டுகளாக முடிக்காமல் இருந்தது.

நான் சொல்லக்கூடிய 12 இற்கும் மேற்பட்ட திட்டங்கள் அனைத்தும் இராஜாங்க ரீதியில் முக்கியமான திட்டங்களாகும். ஆனால், பல ஆண்டுகளாக அவை புறக்கணிக்கப்பட்டு இருந்தன.

இதேவேளை, பாதுகாப்பு விடயங்களில் முன்னைய அட்சியில் சமரசம் செய்யப்பட்டது. ஆனால், என்னுடைய ஆட்சியில் பாதுகாப்புத் துறைக்கும் நாட்டின் நலனுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தேசிய நலனை விடவும் தேசத்தைப் பாதுகாப்பதை விடவும் எங்களுக்கு எதுவும் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. ஆனால், தேசத்தின் நலன் புறக்கணிப்பட்டதையும் சமரசம் செய்யப்பட்ட காலத்தையும் தேசம் பார்த்துள்ளது.

பாதுகாப்புத் துறையில் பல சீர்திருத்தங்களை அரசு கொண்டுவந்துள்ளது. உள்நாட்டிலேயே தளவாடங்கள் தயாரிக்கவும் தேவையை நிறைவு செய்யவும் முன்னுரிமை அளிக்கப்படும். – என்று மோடி குறிப்பிட்டார்.

# அணு ஆயுதங்களை இந்தியா முதலில் பயன்படுத்த மாட்டாது!

## ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்து

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளுக்கு எதிராக, அணு ஆயுதங்களை இந்தியா முதலில் பயன்படுத்தாது என இந்தியா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சர்வதேச அணு ஆயுத ஒழிப்பு தினத்தை அனுசரிக்கும் வகையில் நேற்று (சனிக்கிழமை) சிறப்புக் கூட்டம் இடம்பெற்றது.

காணொலி காட்சி வாயிலாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹாரிஷ்வர்தன் ஷ்ரீங்கலா கருத்து தெரிவிக்கையில் –



தேசிய பாதுகாப்புக்கு அணு ஆயுதங்கள் முக்கியம் என, சில நாடுகள் கருதுகின்றன. இதனால் துரதிரஷ்டவசமாக அணு ஆயுதங்களை ஒழிக்கும் நடவடிக்கைகள் முடங்கியுள்ளன. படிப்படியான செயன்முறை வாயிலாக அணு ஆயுதக் குறைப்பு என்ற இலக்கை அடைய முடியும் என இந்தியா நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளுடன், அர்த்தமுள்ள பேச்சு நடத்தினால் உடன்பாடு ஏற்படும் என முழுமையாக நம்புகிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடுகளுக்கு எதிராக அணு ஆயுதங்களை இந்தியா முதலில் பயன்படுத்தாது என்றும் அதேபோல், அணு ஆயுதமற்ற நாடுகளுக்கு எதிராகவும் அணு ஆயுதங்களை என்றும் பயன்படுத்தமாட்டோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

மேலும் இந்த கொள்கைகளை இந்தியா என்றும் கடைப்பிடிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1982 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் பொது சபையில் தாக்கல் செய்யப்படும் வருடாந்த தீர்மானத்தில், அணு ஆயுதப் பயன்பாடு, மனிதநேயத்திற்கு எதிரான குற்றச்செயல் என்றும் ஐ.நா. விதிகளை மீறும் செயல் என்றும் இந்தியா தொடர்ந்தும் குறிப்பிட்டு வருகிறது.

இந்தியாவின் அந்தத் தீர்மானத்திற்கு பெரும்பாலான நாடுகள் முழு ஆதரவு அளித்து வருகின்றன. அணு ஆயுதங்களைக் குறைக்கவும் அதன் பெருக்கத்தைத் தடுக்கவும் ஏனைய நாடுகளுடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராக உள்ளது என்றும் ஹாரிஷ் வர்தன் ஷ்ரீங்கலா குறிப்பிட்டுள்ளார்.

# வேளாண் சட்டத்தை எதிர்த்து ராகுலின் பேரணி இன்று ஆரம்பம்!

புதிய வேளாண் சட்டமூலங்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் 50 கி.மீ. தூரத்துக்கு டிராக்டர் பேரணியில் செல்கிறார்.

அதற்கமைய இன்று (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பமாகவுள்ள ராகுல் காந்தியின் டிராக்டர் பேரணி, எதிர்வரும் 6ஆம் திகதி வரை 3 நாள்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு புதிதாக 3 வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்துள்ளது. இந்த வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்க்கட்சிகளும் வேளாண் சட்டங்களுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்நிலையிலேயே, புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் 50 கி.மீ. தூரத்துக்கு டிராக்டர் பேரணியில் செல்கிறார்.



இந்த பேரணி நேற்று ஆரம்பமாகி 5ஆம் திகதி வரை நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தப் பேரணி நேற்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 7 ஆம் கட்டப் பேச்சுக்குத் தயாராகும் இந்திய - சீன இராணுவத் தளபதிகள்

கிழக்கு லடாக்கில் படைகளை விலக்கிக் கொள்கின்றமை தொடர்பாக இந்தியா – சீன இராணுவத் தளபதிகள் இடையே அடுத்த வாரம் 7ஆம் கட்ட பேச்சு நடைபெற வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்கு லடாக்கில் உள்ள எல்லைப் பகுதியில் கடந்த 5 மாதங்களாக இந்தியா – சீன இராணுவத்தினர் இடையே மோதல்போக்கு நிலவுகிறது.

இதனை முடிவுக்கு கொண்டுவர இருநாட்டு இராணுவத் தளபதிகள் தொடர் பேச்சுகளை நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக கடந்த மாதம் 30 ஆம் திகதி இருநாட்டு தூதரக அதிகாரிகளும் பேச்சுக்களை நடத்தினர்.

அதில் எல்லைக் கோட்டுப் பகுதியில் ஸ்திரத்தன்மை நிலவ இருநாட்டு இராணுவத்தினரும் கடைசியாக நடத்திய பேச்சில் எட்டப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்த இந்திய அதிகாரிகள் வலியுறுத்தினர்.

இதற்கு முன்னதாக கடந்த மாதம் 21ஆம் திகதி, இருநாட்டு இராணுவத்தினரும் நடத்திய பேச்சில், எல்லையில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் இருந்து சீனப் படைகள் விலக்கப்பட்டு, அங்கு ஏற்கெனவே இருந்த இயல்பு நிலை திரும்புவதுதான் அமைதி ஏற்படுவதற்கான ஒரே வழி என்று இந்திய அதிகாரிகள் வலியுறுத்தினர்..

அதேநேரம் பாங்காங் டெஸ்ஸோவின் தென் கரையில் உள்ள மலைப் பகுதிகளில் இருந்து இந்திய வீரர்களை விலக்கிக் கொள்ளவேண்டும் என்று சீனத் தரப்பு வலியுறுத்தியது.

இந்நிலையில் கிழக்கு லடாக்கில் இருநாட்டு இராணுவத் தளபதிகள் இடையே அடுத்த வாரம் 7ஆம் கட்ட பேச்சு நடைபெற வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான் மிகவும் நன்றாக உணர்கிறேன் ருவிட்டர் பதிவில் தெரிவித்தார் ட்ரம்ப்



இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், நான் இப்போது மிகவும் நன்றாக உணர்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் தொடர்ந்தும் அமெரிக்காவே முதலிடத்தில் உள்ளது.

அங்கு இந்த வைரஸ் தொற்றால் 75 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதுடன், 2 லட்சத்தைக் கடந்த மரணங்கள் பதிவாகியுள்ளன.

இந்தப் பாதிப்புக்கு மத்தியில் அங்கு எதிர்வரும் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலும் இடம்பெறவுள்ளது. எனவே, தொற்றையும் கட்டுப்படுத்தி, தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியையும் தக்கவைக்க வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

இதற்கு மத்தியில் ட்ரம்பின் ஆலோசகர் ஹோம் ஹிக்சுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து, தன்னை தனிமைப்படுத்திக்கொண்ட ட்ரம்ப், கொரோனா பரிசோதனை செய்து கொண்டார்.

அதில், ட்ரம்ப் மற்றும் அவரது மனைவி மெலனியா ட்ரம்ப் ஆகிய இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டமையையடுத்து, அமெரிக்க இராணுவ வைத்தியசாலையில் ட்ரம்ப் சேர்க்கப்பட்டார்.

ட்ரம்பின் உடல் நிலை தொடர்பாக வைத்தியர்கள் கூறுகையில் –

ட்ரம்ப் சிகிச்சைக்கு நல்ல ஒத்துழைப்பு அளிக்கிறார். எனினும் அடுத்த 48 மணி நேரம் மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கொரோனாவுக்கு சிகிச்சைப் பெற்று வரும் ட்ரம்ப், நான் இப்போது மிகவும் நன்றாக உணர்கிறேன் என ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் –

'நான் இப்போது மிகவும் நன்றாக உணர்கிறேன். என்னைத் திரும்பப் பெற நாங்கள் கடுமையாக உழைக்கிறோம். நான் திரும்பி வர வேண்டும், ஏனென்றால் நாங்கள் இன்னும் அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்க வேண்டும்' எனப் பதிவிட்டுள்ளார்.

## மெக்ஸிகோவில் 7 லட்சத்து 57 ஆயிரம் பேருக்குக் கொரோனா!

மெக்ஸிகோவின் உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை நேற்று (சனிக்கிழமை) நிலவரப்படி 7லட்சத்து 57 ஆயிரத்து 953 ஆக அதிகரித்துள்ளது.

அங்கு 4 ஆயிரத்து 863 புதிய தொற்று நோயாளிகளும் 388 இறப்புகளும் நேற்று பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் உண்மையான புள்ளிவிவரங்கள் மட்டுப்படுத்தப்பட்ட சோதனை காரணமாக கணிசமான அதிகரிப்பில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, மெக்ஸிகோவின் மொத்த இறப்பு எண்ணிக்கை 78 ஆயிரத்து 880 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேல்ஸில் பல பெண்களுக்கு தெரியாமல் மார்பகப் புற்றுநோய்!



வேல்ஸில் சுமார் 3 ஆயிரம் பெண்கள் இதுவரை அடையாளம் காணப்படாத மார்பக புற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் 30 ஆயிரம் பேர் மேமோகிராம்களைத் தவறவிட்டனர் என டெனோவஸ் புற்றுநோய் பராமரிப்பு மதிப்பிடுகிறது.

கொரோனா தொற்று காரணமாக சுகாதார சேவையால் மேற்கொள்ளப்படும் மார்பக புற்றுநோய் பரிசோதனை மார்ச் மாதத்தில் வேல்ஸால் நிறுத்தப்பட்டது. இதனை அடுத்து ஓகஸ்ட் மாதத்தில் இந்த சேவை மீண்டும் தொடங்கப்பட்டது.

ஆனால் இந்த நேரத்தில் 30 ஆயிரம் பேர் ஸ்கிரீனிங் சந்திப்பைத் தவறவிட்டனர் என டெனோவஸ் புற்றுநோய் பராமரிப்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாகி ஜூடி ரைஸ் கூறினார்.

உண்மையில் வேல்ஸில் 3 ஆயிரம் பெண்கள் கண்டறியப்படாத மார்பக புற்றுநோயுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே இதன் பொருள் என்றும் சுட்டிக்காட்டினார்

## 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பிரித்தானியாவில் கொரோனா தொற்று

### ஒருநாளில் அதிகூடிய பதிவு

பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தமை காரணமாக முதல் முறையாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாளாந்த கொரோனா தொற்று நோயாளிகளின் எண்ணிக்கையை பிரித்தானியா பதிவு செய்துள்ளது.

அந்தவகையில் புதிதாக 12 ஆயிரத்து 872 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் சோதனை செய்த 28 நாள்களுக்குள் மேலும் 49 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரங்களை விட தொற்றுநோய்கள் மெதுவாக அதிகரிக்கக்கூடும் என்று இந்த வாரம் வெளியிடப்பட்ட தரவு பரிந்துரைத்தன.

குறிப்பாக நாளாந்தம் அடையாளம் காணப்படும் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த திங்கட்கிழமை 4 ஆயிரத்து 44 இலிருந்து செவ்வாயன்று 7 ஆயிரத்து 143 ஆக உயர்ந்தது.

இருப்பினும், அடுத்த நான்கு நாள்களில் நாளாந்தம் அடையாளம் காணப்படுபவர்கள் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 914 முதல் 7 ஆயிரத்து 108 வரை என தொடர்ந்தும் அதிகரிப்பை கண்டது.

அந்தவகையில் சனிக்கிழமையன்று அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு காணப்பட்டது.

இது முந்தைய நாளில் 2 லட்சத்து 64 ஆயிரத்து 979 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் விளைவாகும் எனத் தெரிவிக்கப்பட்டாலும் 24 மணி நேர காலப்பகுதியில் நடந்த மூன்றாவது அதிகபட்ச சோதனை இது என்றும் கூறப்படுகின்றது.

அதன் பிரகாரம் சனிக்கிழமையன்று பிரித்தானியாவில் பதிவு செய்யப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 4 லட்சத்து 80 ஆயிரத்து 17 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தானில் டிரக் மூலம் குண்டு தாக்குதல்; 15 பேர் பலி!



ஆப்கானிஸ்தானில் டிரக் மூலம் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதில் 15பேர் கொல்லப்பட்டனர்.

Nangarhar மாகாணத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. இந்த வெடிகுண்டு தாக்குதல் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் இடிந்தும் கார்கள் சேதமடைந்தும் காட்சி அளித்தன.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

12க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு எந்த தீவிரவாத குழுவும் இதுவரை பொறுப்பேற்கவில்லை.

## ட்ரம்புக்கு அருகிலிருந்த ஒருவருக்கும் கொரோனா!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு அருகில் இருந்தவர்களுக்கு கொரோனா ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக வெள்ளை மாளிகையின் மற்றொரு ஊழியருக்கு கொரோனா தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது என ஏபிசி செய்தி தெரிவிக்கிறது.

ஓவல் ஒஸ் ஒப்ரேஸ்ஸ் பணிப்பாளரும் ட்ரம்பின் மெய்க்காப்பாளருமான நிக் லூனா, கொவிட் - 19 இற்கு சாதகமாக சோதனை செய்துள்ளார். அவருக்கே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் அடிக்கடி பயணம் செய்த ஒருவர் என்றும் ஏபிசி தெரிவித்துள்ளது.

## வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் குறித்து பிரி. – ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் பேச்சு



பிரெக்ஸிற்க்கு பிந்தைய வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை பிரதமர் பொரிஸ் ஜோன்சன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வென் டெர் லேயன் ஆகியோர் ஒப்புக் கொண்டுள்ளனர் என டவுனிங் ஸ்ட்ரீட் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என அவர்கள் ஒப்புக்கொண்டபோதும் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த இடைவெளிகளைக் குறைக்கும் முயற்சிக்காக இருவரும் தீவிரமாக வேலை செய்யுமாறு தங்கள் தலைமைப் பேச்சுவார்த்தையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான பேச்சு, ஒப்பந்தம் எட்டப்படாமல் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவுக்கு வந்தது.

மீன்பிடி மற்றும் அரசாங்க மானியங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்களில் சமரசம் செய்ய இரு தரப்பினரும் அழைப்பு விடுக்கின்றனர்.

இந்நிலையில் தொலைபேசி மூலம் நேற்று சனிக்கிழமை கலந்துரையாடிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உர்சுலா வென் டெர் லேயன் ஆகியோர் இது தொடர்பாகக் கலந்துரையாடியமையுடன் ஒரு பேச்சை நடத்தவும் ஒப்புக்கொண்டனர்.

எனவே எதிர்காலத்தில் ஒரு மூலோபாய ஐரோப்பிய ஒன்றிய – பிரித்தானிய உறவுக்கு வலுவான அடிப்படையாக ஓர் ஒப்பந்தத்தைக் கண்டுபிடிப்பதன் முக்கியத்துவத்தை இருவரும் ஒப்புக் கொண்டனர் எனவும் டவுனிங் தெரு ஊடகப்பேச்சாளர் கூறியுள்ளார்.

# வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க தொடர்மாடி வீடுகள் அமைப்பு!

## கெஹலிய ரம்புக்வெல்ல யோசனை

வீடில்லாப் பிரச்சனைகளைத் தீர்க்க அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போன்று தொடர்மாடி வீடுகளை அமைக்கும் யோசனையை முன்வைக்கவுள்ளதாக வெகுசன ஊடக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று (சனிக்கிழமை) சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து, உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊடக அமைச்சைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின் வட பகுதிக்கு வருகை தந்து ஊடகவியலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொண்டுள்ளோம்.

வினைத் திறன் மிக்க ஒரு சேவையை வழங்க நாம் திட்டமிட்டுள்ளோம்.

நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன் கொண்டு செல்ல உங்களுடைய பங்களிப்பு அவசியம். கடந்த காலங்களில் பார்க்கின்ற போது ஊடகத்துறையில் ஒரே பாங்கான பிரச்சினைகளே உள்ளன.

ஜனாதிபதி அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்கும் போது இராஜாங்க அமைச்சுக்களுக்கும் ஒதுக்கீடுகளை வழங்கி அதனூடகவும் விரைவாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளார்.



தெற்கு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து வரப்பிரசாதங்களும் எங்களுக்கும் கிட்டவேண்டும் என வடக்கு ஊடகவியலாளர்கள் கோருகின்றனர்.

வடக்காக இருக்கட்டும், தெற்காக இருக்கட்டும், மேற்காக இருக்கட்டும், கிழக்காக இருக்கட்டும், ஊடகவியலாளர்கள் பொதுவாகவே நோக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளும் பொதுவானவையாகவே காணப்படுகின்றன.

கொழும்பில் பணியாற்றும் ஊடகவியலாளர்களின் தகவல் பரிமாற்ற உபகரணங்களுக்கும், பிராந்திய ஊடகவியலாளர்களின் உபகரணங்களுக்கும் வேறுபாடுகள் இருக்க கூடும்.

பிரதேச ரீதியிலான ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து ஒரு சங்கமாக தமது பிரச்சினைகளை எழுத்து மூலம் முன்வைக்கலாம் என்கின்ற ஒரு யோசனையை நான் முன் வைக்கின்றேன்.

பிரதேச ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு பிரச்சினைகள் பல இருக்கின்றமையை நான் காண்கின்றேன். ஊடகவியலாளர்கள் யார்? என்ன தன்மையை கொண்டிருப்பார்கள் என்ற கேள்வி எங்களிடமும் இருக்கின்றது.

எங்களால் முடிந்த சேவைகளையும், சலுகைகளையும் வழங்குவதற்கு நாங்கள் முயல்வோம்.

பல்வேறு துறையினருக்கும் காணிகள் வழங்குவது தொடர்பாக நான் கொண்டிருக்கும் கருத்து சற்று வேறுபாடானது.

எமது நாட்டின் ஜனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப காணிகள் பெருகுவதில்லை. ஆகவே ஒவ்வொரு துறையினரும் கேட்கின்ற காணிகளை வழங்குவது சாத்தியமான விடயமல்ல.

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பார்க்க வேண்டும். அங்கு குடியிருப்புக்களுக்காகத் தொடர் மாடி வீடுகளை அமைத்துள்ளார்கள்.

அவ்வாறானதொரு முன்மொழிவுகளை முன் வைக்க விரும்புகின்றேன். ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி பல மக்களும் வீடின்றிக் காணப்படுகின்றார்கள்.

இதனால் இதனை ஒரு பொதுப் பிரச்சினையாகக் காண்கின்றேன். ஆகவே ஊடகவியலாளகளின் பிரச்சினைகளைத் தீர்க்க திட்டமிடப்பட்ட செயன்முறை ஒன்றை முன்னெடுக்க யோசித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# பூசகரின் கொலை தொடர்பில் உண்மை கண்டறிய வேண்டும்

## சைவமகாசபை வலியுறுத்து

புங்குடுதீவு – பாணாவிடை சிவன் ஆலய பிரதம அர்ச்சகர் ரூபன் சர்மாவின் படுகொலையை அகில இலங்கை சைவ மகா சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

கொலையாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு உயர்ந்த பட்ச தண்டனை வழங்குவதன் மூலம் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட தரப்புக்களை சைவ மகா சபை கேட்டுக்கொண்டுள்ளது.

படுகொலை தொடர்பாக சைவ மகா சபை வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

தாய் மதமான சைவ சமயத்தில் அளவுகடந்த பற்றுறுதி கொண்ட ரூபன் சர்மா, ஜீவகாருண்யத்திற்காக அதிகம் போராடியவர். சமூக விரோத செயல்களுக்கு எதிராகத் துணிந்து குரல் கொடுத்தவர். இந்த நிலையிலேயே இவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்த கொலையின் பின்னணி ஆராயப்பட்டு உண்மை வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். கொலையாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். இதன் மூலம் சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்பட வேண்டும்.

மனிதத்துவத்திற்கும் ஜீவகாருண்யத்திற்கும் போராடி உயிர் துறந்த, தாய் மதத்தில் அளவு கடந்த பற்றுறுதி உடைய வணக்கத்துக்கும் போற்றுதலுக்குமுரிய ரூபன் சர்மாவிற்கு ஆத்மார்த்த அஞ்சலிகள். அவரது ஆத்மா இறை சிவனின் பாதார விந்தங்களில் சாந்திபெறும். அவரது நல்ல எண்ணங்கள் இவ்வுலகில் நிலைத்து நிற்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசாங்க தகவல் பிரிவு கிளிநொச்சியில் திறப்பு!







அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் மாவட்ட ஊடகப் பிரிவின் கிளிநொச்சி அலுவலகம் வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவால் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட ஊடகப் பிரிவே நேற்று (சனிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஆகியோரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் வரவேற்றதைத் தொடர்ந்து திறப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர்கள், கிளிநொச்சி பிரதேச செயலாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நேற்று 7 பேருக்கு கொரோனா தொற்று!

இலங்கையில் கொரோனாவைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 395 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று (சனிக்கிழமை) மாத்திரம், 7 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றிற்கு உள்ளாகியிருந்த மேலும் 9 பேர் நேற்று குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 254 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்று உறுதியான 128 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை சுகாதார நடைமுறைமுறைகளை பின்பற்றுமாறு தொடர்ந்து மக்களுக்கு, அரசாங்கம் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரையைக் கடத்திக் கொன்ற இருவர் அம்பாறையில் கைது!

அம்பாறை, ஒக்.04

வீதி அருகில் உணவு தேடி வந்த மரையை கடத்தி இறைச்சியாக்கிய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று சாகாமம் வீதியில் உள்ள பிட்டம்பே எனும் பகுதியில் மரை ஒன்றை வேட்டையாடிய பின்னர் அதனை இறைச்சியாக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றின் ஊடாக அக்கரைப்பற்று நகர் பகுதிக்கு எடுத்துச்செல்லும் வழியில் நேற்று (சனிக்கிழமை) மதியம் இருவர் கைதாகினர்.

தகவல் ஒன்றை அடிப்படையாக வைத்து அப்பகுதியில் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் 37 கிலோ எடை இறைச்சியை தம்வசம் சட்டவிரோதமாகக் கடத்திய ஹோட்டல் உரிமையாளர் உட்பட இருவரைக் கைது செய்திருந்தனர்.

இதன்போது கைதானவர்கள் அக்கரைப்பற்று விநாயகபுரம் பகுதியை சேர்ந்த 55 மற்றும் 42 வயதை உடையவர்கள் எனவும் சந்தேக நபர்கள் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் விசாரணை செய்யப்பட்ட பின்னர் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2020 இல் வெளியிடப்பெற்றது.